TAMIL

singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

OLAFUR ELIASSON
# YOUR CURIOUS JOURNEY

10 MAY—22 SEP 2024
TANJONG PAGAR DISTRIPARK

## ஒலஃபர் எலியாசன்: உங்களது ஆர்வப் பயணம்

" ஒரு வகையில், ஆர்வம் பின்னோக்கிச் செல்வதை விட முன்னோக்கிச் செல்லுதல் தொடர்பானதாகும். முன்னோக்கிச் செல்லுதல் வாழ்வதற்கான புதிய மாதிரிகளைச் சிந்திப்பதாகும். ஆர்வம் உள்நோக்கிப் பார்த்து நமது அகவாழ்க்கையில் கவனம் செலுத்துவதையும் குறிக்கும். நமது நவீன வாழ்க்கையின் பெரும்பகுதியைப் பாதிக்கும் பகுத்தறிவாக்கம் நமது சொந்த இருத்தலுணர்வு, உயிர்ப்புடன் இருத்தல், நமது உணர்வுகளுடன் முழுதும் ஈடுபடுவது ஆகியவற்றிலிருந்து நம்மைப் பிரித்து எடுத்துக்கொள்கிறது என்பதை அங்கீகரித்தலும் இதில்அடங்கும்."

- ஒலஃபர் எலியாசன்

ஐஸ்லாந்திய-டேனிஷ் கலைஞரான ஒலஃபர் எலியாசனின் செயல்பாடு மற்றவர்களுடன் ஒத்திசைந்து இயங்கும் மகிழ்ச்சியளிக்கும் அனுபவம், அழகுடனான உள்ளுருப்புகளின் உணர்வுப்பூர்வமான சந்திப்புகள், பருவநிலைச் சிக்கலில் வாழ்வதன் பதற்றங்கள் ஆகியவற்றைப் பேசுகின்றன. எலியாசன் அவர்களின் படைப்புகள் காற்று, காந்த விசை போன்ற நமது சுற்றுச்சூழலின் பார்க்க இயலாத கூறுகளை தெளிவாகத் தெரியும் வண்ணம் உணர்த்துகின்றன.

மெய்யியல் அறிஞர் திமோத்தி மார்ட்டனின் கருத்தாக்கமான “மிகைப்பொருட்கள்” எலியாசனின் படைப்புக்களின் பொருண்மைகளை அணுகுவதற்கான ஒரு சட்டகத்தை அளிக்கின்றன. வரையறையிலிருந்து தப்பி, இடங்களைக் கடந்து, வகைபாட்டை எதிர்த்து, மிகைப் பொருள்கள் மனிதப் புரிதல், கற்பனைகளுக்கான எல்லைகளுக்கு அப்பாற்பட்டு உலக அளவிலும், பரந்த கால அளவிலும் விரிவடையும் பெரிய நிகழ்வுகளை அல்லது பொருட்களைச் சுட்டுகின்றன

நாம் தரவுகளைக் காட்சிப்படுத்தும் கருவிகளான கணக்கீட்டு மாதிரிகள், வரைபடங்கள், விளக்க வரைபடங்கள் ஆகியவற்றை, விளக்க இயலாத உலக நிகழ்வுகளையும், நமது மனத்திற்குள்ளும் நமக்கு வெளியேயும் பிடிபடாத அனுபவங்களையும், நமது புலன்களுக்குள் நிறைப்பதற்குப் பயன்படுத்துகிறோம்.

எலியாசன் கற்பனைத்தோற்றம் கொண்ட மிகைப்பொருட்களைத் தனது ஓவியங்கள், சிற்பங்கள், நிறுவல்களில் புரிய இயலாதாவற்றைப் புரியவைக்கும் குறுகிய, எளிய தூரிகை அமைப்பாகப் புரிந்துகொள்கிறார்.

# காப்பாளர் இயல்கள்

## தோற்றம்

காட்சித் துறைக் கலைஞராக எலியாசன் இந்த உலகை நாம் வெவ்வேறு வழிகளில் பார்ப்பதில் கவனம் செலுத்துகிறார். எலியாசன தனது படைப்பில் உருவாக்கும் இயற்பியலுடனான விளையாட்டுத்தனமான சோதனைகள் வழியாக தோற்றத்திற்கும் அனுபவத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை ஆய்வு செய்கிறார். கலைப்பொருட்கள் என்பதைவிட எலியாசனின் படைப்புகளை நுட்பங்களைத் தெளிவாக வெளிப்படுத்தும் காட்சி, அறிவியல் சோதனைகள் அல்லது திரிபுக்காட்சி அனுபவங்கள் எனப் பார்க்கலாம். உங்களது ஆர்வப் பயணம் எலியாசனின் காட்சிப்பார்வையில் உள்ளே காணப்படும் உள்ளார்ந்த சிக்கலை வெளிப்படுத்தும் படைப்புக்களைக் கொண்டது.

## பார்வை

சொல்லாய்வின் அடிப்படையில்  நிகழ்வியல் (பினாமெனாலஜி) பைனொமெனான் (தோற்றம்) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வருகிறது. இந்த பொருளில் பினாமெனாலஜி என்பதை தோற்றத்தைப் (உண்மைத்தன்மைக்கு எதிரான பொருளில்) பற்றியும், அவற்றின் தவிர்க்கமுடியாத அகநிலை அனுபவங்களைப் பற்றியும் செய்யப்படும் ஆய்வு எனக் கொள்ளலாம். அவருடைய படைப்புகளை உருவாக்குவதிலும் தலைப்பிலும்,  நீ என்ற தற்சுட்டைப் பயன்படுத்துவதன் வாயிலாக  அவர் முதல் நிலைப் பார்வையை வலியுறுத்துகிறார். இதன் வழியாக அவருடைய படைப்புகள் முதல் நிலை அனுபவங்களின் அடிப்படையில் அமைந்து வரையறுக்கப்படுகின்றன  என்பதை  நமக்குத் தெரிவிக்கிறார். இந்த இடை-அகநிலைத்தன்மையை வலியுறுத்துவதன்வாயிலாக, உங்களது ஆர்வமுள்ள பயணத்தில் உள்ள படைப்புகள் இவ்வுலகைக் குறித்தும் அதன் நிகழ்வுகளைக்குறித்தும் நமது அனுபவங்களை உருவாக்குவதில்   நமது செயல்மிகு பங்களிப்பை நினைவூட்டுகின்றன.

## இடம்

தோற்றங்களின் நமது அனுபவம், அவை நிகழ்வாகவோ,பொருளாகவோ அல்லது மிகைப்பொருளாகவோ இருந்தாலும், அவை  நாம் வாழும் இடங்களுடனும், சூழலமைப்புகளுடனும் பிணைக்கப்பட்டுள்ளன. உருகும் பனிப்படலங்கள் மிதமான வெப்ப மண்டலத்தில் வாழும் மக்களுக்கு சூழலியல் சீர்கேட்டைப் பாதிக்கக்கூடிய பிரதிபலிப்பாக இருந்தாலும், சிங்கப்பூர் போன்ற நில  நடுக்கோட்டுப் பருவநிலைப் பகுதியில் வாழ்வோருக்கு முழுவதும் புலனாகாத ஒரு பொருண்மையாக இருக்கக்கூடும்.   புவியின் தென்கோளப்பகுதியில், பருவங்கள் வடதுருவத்தில் நிலவும் பருவ நிலையின் போக்கிற்கு எதிர்மறையாகக் காணப்படுகின்றன. நாம் வாழும் சூழல்கள், மந்தமான நிலவமைப்பிலிருந்து மாறுபட்டவை. அவற்றின் அதிகமான, குரல்களையும், இணைந்திசைகளையும்  நமது புலன்களை ஒத்திசைவு செய்வதன் வழியாக நாம் மிக நுட்பமாகக் கேட்டு அதிகமான ன கவனம் செலுத்தலாம்.

## *பனிப்பாளங்கள் உருகும் வரிசை 1999/2019* [இடம்]

2019
30 சி-அச்சுக்கள்
ஒவ்வொன்றும் 31 × 90.5 செமீ அளவில்
6 இல் 6 ஆவது பதிப்பு

*பனிப்பாளங்கள் உருகும் வரிசை 1999/2019*, ஐஸ்லாந்தில் உள்ள 30 பனிப்பாளங்களைப் பதிவு செய்யும் வான்வெளி ஒளிப்படங்களின் வரிசையாகும். இப்படங்களின் அச்சுக்கள் இரட்டையாகக் (ஜோடியாக) காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு இரட்டைப் படங்களிலும், இடது பக்கம் உள்ள படம் 1999இல் இருந்த பனிப்பாளத்தின் தோற்றத்தைக் காட்சிப்படுத்துகிறது; வலதுபுறமுள்ள படம் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே பனிப்பாளத்தின் தோற்றத்தை மீள்பார்வைக்குள்ளாக்குகிறது.

ஒவ்வொரு இர்ட்டைப் படங்களிலும் பனி ஏடுகள் காலப்போக்கில் மிகத்தெளிவாகப் பின்வாங்கி அதிகமாக பாறை, புவிப்பகுதியை வெளிப்படுத்தியுள்ளன. இந்தப் பனிப்பாளங்களை முதலில் 1999இல் ஒளிப்படமெடுத்த போது எலியாசன் பருவநிலை மாற்றத்தைக் குறித்த ஒரு படைப்பை உருவாக்க முனையவில்லையென்றாலும். அவர் நிலவமைப்பின் பாதிக்கக்கூடிய தன்மையைக் குறித்து அறிந்திருந்தார். குறிப்பிட்ட பனிப்பாளங்களை 1999 இலும் 2019 இலும் இருந்த நிலைகளுடன் ஒப்பிடுவதன் வாயிலாக இயற்கைச்சூழல் எவ்வாறு மனிதச் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது, தொடர்ந்து பாதிக்கப்பட்டுவருகின்றது என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

## *சாளரம் (வெண்டிலேட்டர்)* [தோற்றம்]

1997
மின்விசிறி, மின்கம்பி, இழை
அளவுகள் மாறக்கூடியவை
நவீனக் கலை அருங்காட்சியகத்தின் சேகரிப்பு

*சாளரத்தில்* ஒரு தனித்த மின் விசிறி கூரையிலிருந்து தொங்குகிறது. அந்த மின்விசிறியின் இலை அலகுகள் (பிளேடுகள்) சுழலும் போது அது காற்றை வெளியே தள்ளுகிறது; எதிரீடாக காற்று மின்விசிறியை எதிர்த்திசையில் தள்ளுகிறது. அரங்கில் இந்த மின்விசிற்ய்வின்றி நகர்தலால் இருபுறமும் நகரும் சுழற்சி தொடர்கிறது. மின்விசிறியின் இயக்கம் தொடர்ச்சியானது எனினும், அதன் ஆடும் பாங்கு சீரற்றும், கணிக்கமுடியாததாகவும் உள்ளது. மூன்று பாகங்களை மட்டும் கொண்ட ஒரு எளிமையான தனித்துவமான கட்டமைப்பான *சாளரம்*, கண்ணால் பார்க்க இயலாத காற்றைப் போன்ற கூறுகளை உணரவைக்கும் ஒரு விளையாட்டுத்தனமான ஆய்வாகும் தொடர்ந்து வரும் காற்றலைகள் நம்மைக் குளிர வைக்கும் இயல்பைக் கொண்டிருக்கும்போது, சாளரத்தில் உள்ள மின்விசிறி காற்றை குறிக்கோளின்றி சுழலச்செய்கிறது; இந்த நிலை ஒரு பயன்மிகு பொருளை குறிக்கோள*ற்றதாக்குகிறது வ் .*

## *காற்று எழுத்துக்கள் (22 மார்ச் 2023)* [இடம்]

2023
வரைதிரை மீது கருப்பு அக்கிரிலிக் மை
Ø 140 செமீ

## *காற்று எழுத்துக்கள் (23 மார்ச் 2023)* [இடம்]

2023
வரைதிரை மீது கருப்பு அக்கிரிலிக் மை
Ø 140 செமீ

## *காற்று எழுத்துக்கள் (20 ஜூன்2023)* **[இடம்]**

2023
கருப்பு வரைதிரை மீது வெள்ளை அக்கிரிலிக் மை
Ø140 செமீ

## *காற்று எழுத்துக்கள் (28 ஜூன்2023)* **[இடம்]**

2023
கருப்பு வரைதிரை மீது வெள்ளை அக்கிரிலிக் மை
Ø140 செமீ

கட்டாரின் தேசிய அருங்காட்சியகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில்,எலியாசன் அருங்காட்சியகச் சுவர்களுக்கு அப்பால் உள்ள நிலவமைப்புகள் குறித்த தனது படைப்புக்களைக் காட்சிப்படுத்த விரும்பினார். இக்கண்காட்சியின் திறவுகோலாக அமைத்தவை பாலைவனச் சூழலை ஒத்து உருவாக்கப்பட்ட அவரது படைப்புக்களின் வரிசையாகும். இந்த இடம் தொடர்பான படங்களை உருவாக்க இரு வேறு படம் வரையும் கருவிகள் அல் தகிரா அலையாத்திக்காடுகளுக்கு அருகே திறந்தவெளியில் வைக்கப்பட்டன.

## *சூரிய வரைபடம் (21 ஜூன் 2023)* **[இடம்]**

2023
கலப்பு அட்டை மீது எரிந்த வெள்ளைத்தாள்
Ø140 செமீ

## *சூரிய வரைபடம் (22 ஜூன் 2023)* **[இடம்]**

2023
கலப்பு அட்டை மீது எரிந்த வெள்ளைத்தாள்
Ø140 செமீ

சூரிய வரைபட வானாய்வு நிலையத்தில் தனியானதொரு திறந்தவெளிக் கருவி இரண்டாவது படவரிசைகளை உருவாக்கியது. இரண்டு வரிசையிலான் கண்ணாடிக் கோளங்கள் மாற்றத்தக்க அடித்தளத்தின் மேல் உள்ள வட்டவடிவ தீக்காப்புள்ள நீர்வண்ணத்தாளின் மீது அமர்த்தப்பட்டன. குவி ஆடி போன்று செயல்பட்ட இந்த ஆடிக் கோளங்கள் சூரிய ஒளியை தாளின் குறிப்பிட்ட சில இடங்களின் மீது குவித்து எரிந்த குறியீடுகளை உருவாக்கின. ஒரு நாளின் வெவ்வேறு நேரங்களில் சூரியன் இடம் மாறும் போது, தாளின் மீது ஏற்பட்ட எரிந்த குறியீடுகள் சூரியனினைச் சுற்றும் புவியின் இயக்கத்தைப் பதிவு செய்தன. இந்த இயக்கம் தாளை கடிகாரத்தின் திசையில் சுற்றச் செய்த மின்கருவியின் செயல்பாட்டினால் ஊக்கப்படுத்தப்பட்டது. இந்தப் படங்கள் சூரிய வரைபடம் எனப் பெயரிடப்பட்டு அவை உருவாக்கப்பட்ட நாள் எழுதப்பட்டது, இவை எலியாசன், நமது கோள், அது சுற்றிவரும் சூரியன் ஆகியோரால் இணைந்து உருவாக்கப்பட்டது எனக்கூறலாம். நாம் நடக்கும் போது எவ்வாறு காலடித்தடத்தை பதிவு செய்கிறோமோ, அதுபோல சூரியன் தனது வழியைத் தாளின் மீது விட்டுச்சென்றது. இதன் விளைவாக உருவான இந்தப்படம் அண்டவெளியின் இயக்கத்திற்கும், அல் தகிரா அலையாத்திக்காட்டில் நேரத்தின் செலவுக்குச் சாட்சியாககவும் உள்ளது.

## *பல் நிழல் வீடு* **[பார்வை]**

2010
மரம், உலோகம், துணி, ஹாலோஜன் விளக்குகள் (ஆரஞ்சு, சிவப்பு, நீலம், பச்சை), கண்ணாடி, காட்சித்திரை
ஒளிஊடுருவும் காட்சித்திரை
அளவுகள் மாறக்கூடியன

பல் நிழல் வீடு நீலம், ஊதா, மஞ்சள், பச்சை எனப் பல வண்ண விளக்குகளால் ஒளியூட்டப்பட்ட தனித்தனியான அறைகளின் வரிசைகளை கொண்டது இந்த அறைகளில் நாம் நுழையும் போது நமது உருவங்கள் உருச்சிதைந்த நிழலாக ஒளி

ஊடுருவும் காட்சித்திரை மீது விழுகின்றன. இந்த விளைவு நம்மை முன்னும் பின்னும் நடத்தல், காட்சித்திரையின் அருகே நடத்தல், பார்வையாளர்களுடன் உரையாடுதல் என்பன போன்ற  வெவ்வேறு விதமான நாடகத்தனமான இயக்கங்களை முயற்சி செய்து பலவித விளைவுகளை ஏற்படுத்த ஊக்குவிக்கின்றது...  இந்த நிழல் உருவங்கள் அறையின் உள்ளிருந்தும், வெளியேயிருந்தும் பார்க்கக்கூடிய நிலையில், இப்படைப்படைப்பை நிழல் நாடகத்திற்கான ஆளுயர மேடை  எனக் கருதலாம்

## *நிலைதடுமாறும் திசைகாட்டி* **[இடம்]**

2019
மிதந்துவந்த மரம், காந்தங்கள், வண்ணம் ( நீலம், கருப்பு, மஞ்சள், வெள்ளை)
38 × 134 × 24 செமீ

ஐஸ்லாந்து கடற்கரைப் பகுதியில் மிதந்துவந்த மரத்தில் செதுக்கப்பட்ட, *நிலைதடுமாறும் திசை காட்டி*, ஒரு புறம் கூர்மையாக்கப்பட்ட மரக்கட்டை மீது திசைகாட்டியின் அளவிடும் வட்டம் வரையப்பட்டதாகும். திசைகாட்டி அளவிடும் வட்டம்  வரைபடங்கள் அல்லது கடற்செலவு விளக்கப்படங்கள் மீது காணப்படும் இவை  நேர்த்திசைகளைக் காட்டுவதன் வழியாகப் பயனாளிகள்  தங்களது திசையை அறிய உதவுகின்றன. இப்பயன்பாட்டை கண்ணாடிபோலக்  காட்டும் வகையில்  வலிமையான, அரிய-புவிக் காந்தங்கள் இச்ச்சிற்பத்தின் கீழே எந்நேரமும் வடக்கு-தெற்குத் திசையைக் காட்டும் வண்ணம் தொங்கவிடப்பட்டுள்ளன. 2009 இலிருந்து எலியாசன் கிடைத்த பொருள்களான பாறைகள், கண்ணாடித்துண்டுகள், மின்கம்பிகள், காந்தங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்துவருகிறார். திசைகாட்டியின் மீதான அவரது அதிகமான விருப்பத்திற்கான காரணம் அவற்றின் இடம், திசையை தெளிவாக உணர்த்தக்கூடிய தன்மையாகும்.

## *இரட்டைச் திருகுச்சுருள்* **[தோற்றம்]**

2001
துருப்பிடிகாத எகு (எவர் சில்வர்) மின்பொறி
200 × 95 × 95செமீ

இரட்டைத் திருகுச்சுருள் என்பது ஓர் இரும்புக் குழாயை இரட்டை ஹீலிக்ஸ் வடிவத்தில் உருட்டப்பட்ட வடிவமாகும், இச்சிற்பம் மின்பொறிமயமாக்கப்பட்டது, இதைச் செயற்படுத்தும்போது சுருளின் ஒரு பாதி மேலே சுழலுகின்றது. மற்றொரு பாதி மெதுவாகக் கீழிறங்குகிறது. இயக்கத்தை காண்பிப்பது போன்ற தோற்றத்தை உருவக்கினாலும், இச் சிற்பத்தின் உண்மையான இடம் மாறுவதில்லை, கண்ணளவில் உள்ள இச்சிற்பத்தின் இரட்டை ஹீலிக்ஸ் மரபணுவின் கட்டமைப்பை நினைவூட்டுகிறது. இருப்பினும் இச்சிற்பம் முற்றிலும் வேறுபட்ட நிழலைத் தரையில் விழச்செய்கிறது. ஒன்றின் மீது ஒன்றாக விழும் உள்ளுள்ள வட்டங்கள் கடிகாரத்தின் நகரும் பற்சக்கரம் போலத் தோன்றுகின்றன.

## *பாசிச் சுவர்* **[இடம்]**

1994
கலைமான் பாசி, மரம், மின் கம்பி
அளவுகள் மாறக்கூடியன
டேட் சேகரிப்பு, லண்டன்

எலியாசன் அவர்களின் ஐஸ்லாந்துடனான உறவில் முற்றிலும் அடங்கும் படைப்பு ”மாஸ் வால்” எனப்படும் பாசிச் சுவர். உயிர்மத்தன்மையுடைய, செங்குத்தான கம்பளமான இப்படைப்பு கலைமான்  கற்பாசியால் (கிளாடோனியா ரங்கிஃபெரினா) ஆனது; இது கலைமான் பாசி எனவும் அழைக்கப்படுகிறது. ஒரு பூஞ்சை, ஒரு பாசி ஆகியவற்றின் இணைப்பிறப்பான கலைமான் பாசி தூந்தரா, தைகா சூழலமைப்புகளில் பெருமளவில் காணப்படுகிறது.  இந்தக் கற்பாசி கம்பிவலைக்குள் இணைக்கப்பட்டு ஒரு கம்பளம் போல ஒரு அரங்கின் முழுச் சுவரிலும் காணப்படுகிறது. பொதுவாக, ஒருமுகத்தன்மையுள்ள அருங்காட்சியகத்தின் பரப்பை இடையீடு செய்து, இப்படைப்பு அகப்பகுதி,

புறப்பகுதிகளுக்கிடையேயான வேறுபாட்டை சிதைக்கிறது. பார்வையாளர்கள் இந்த உயிருள்ள, சுவாசிக்கும் சுவரின் எதிரே, நேரில் வரும் போது இயற்கையின் மிகச் சிறந்த அதிசயங்களில் ஒன்றை அவர்கள் காண்கிறார்கள்.

## *பனிப்பாளத்தின் கடைசி ஏழு நாள்கள்* [இடம்]

2024
வெண்கலம், கண்ணாடி கோளம், எவர்சில்வர், அலுமினியம்
152.5 × 300 × 70 செமீ

பருவ நிலைமாற்றத்திற்குள்ளாகும் பெரும் பனிப்பாளங்களின் மாற்றங்கள் பனிப்பாளத்தின் கடைசி ஏழு நாள்கள் என்ற படைப்பில் வலியுறுத்தப்படுகிறது. ஐஸ்லாந்தின் தெற்கில் உள்ள வைரக் கடற்கரையில் (டையமன்ட் பீச்) கிடைத்த ஒரு தனி பனிக்கட்டி, அதன் வெவ்வேறு உருகிய நிலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையும் வெண்கலத்தில் வார்க்கப்பட்டு, நிலையான தன்மையைக் நினைவூட்டுகிறது. ஒவ்வொரு வார்ப்பும் ஒரு தெளிவான கண்ணாடி வடிவத்துடன் இரட்டையாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது உருகுதலால் இழக்கப்பட்ட நீரின் கொள்ளளவு அடிப்படையிலான காட்சிப்படுத்தலாகும்

இக்காட்சிப்படுத்தலை ஒரு கையறு நிலைத் தரவுக்காட்சிப்படுத்தல் எனலாம். பனிப்பாளத்தின் கடைசி ஏழு நாள்கள் என்ற படைப்பு கொஞ்சம் கொஞ்சமாக ஏற்படும் அழிவையும், இந்தச் செயல்முறையில் இழக்கப்பட்ட மொத்த அளவையும் நினைக்குமாறு நம்மைத் தூண்டுகிறது.

## *தூரத்தின் நில அதிர்வுவரைபடச் சான்றுரை (பெர்லின்–சிங்கப்பூர், 1 முதல் எண். 6 வரை)* [இடம்]

2024
மரம், தாள், மை (கருப்பு)
ஒவ்வொன்றும் 57.8 × 57.8 × 3.8 செமீ

எலியாசனின் கலைப் படைப்பாக்கத் தொழிலிலும் தூரத்தின் நில அதிர்வுவரைபடச் சான்றுரை
*பெர்லின் சிங்கப்பூர்–எண். 1* முதல் எண். 6 வரை) என்ற கண்காட்சியிலும் படம்வரையும் கருவிகள் முக்கிய இடம்பெறுகின்றன அதிக அளவில் கார்பன் வெளிப்பாடு இருந்தபோதிலும், விரைவாகச் சென்றடைவதற்காக பொருள்கள் வான்வழியாக அனுப்பப்படுகின்றன. கலைப்படைப்புக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. கண்காட்சி ஏற்படுத்தும் கார்பன் சுவடுகளைக் கருத்தில்கொண்டு, மாற்றாக இக்கலைஞர் தனது *உங்களது ஆர்வப் பயணம்* என்ற கண்காட்சியின் பெரும்பாலான கலைப் படைப்புக்களை கடல்வழியாக சிங்கப்பூருக்கு அனுப்பியுள்ளார்.

இப்படைப்புக்களின் நிலம், கடல் வழியான பயணத்தைப் பதிவு செய்ய ஆறு எளிய வரையும் கருவிகளும் கப்பலில் அனுப்பப்பட்டன. வெற்றுத்தாளின் மீது அமைக்கப்பட்ட இக்கருவிகளின் கைகளில் குமிழ்முனைப் பேனாக்கள் இணைக்கப்பட்டு அவைத் தடையின்றி இயங்குமாறு செயல்படுத்தப்பட்டன. காட்சிப்படங்கள் வைக்கப்பட்ட பெட்டிகள் கப்பல் மேலும் கீழும் அசையும் போதும், திரும்பும்போதும் ஏற்பட்ட அசைவுகளைப் பதிவு செய்தன. இது மிகத் தனித்துவம் வாய்ந்த *நில அதிர்வுவரைபடங்களை உருவாக்கியது*.

## *அழகு* [பார்வை]

1993
விளக்குவட்டம், நீர், நுனிக்குழல்கள், மரம், குழாய், பம்பு
அளவுகள் மாறக்கூடியன
சமகாலக்கலை அருங்காட்சியகச் சேகரிப்பு, லாஸ் ஏஞ்சலஸ்

*அழகு* என்ற படைப்பில், மெல்லிய மழைத்தூறலை நினைவூட்டக்கூடிய ஒரு மெல்லிய பனிப்பொழிவு ஏடு இருண்ட இடத்தில் ஒற்றை விளக்குவட்டத்தில் ஒளியூட்டப்படுகிறது. செங்குத்தான கோணத்தில் பார்க்கும் போது, ஒளியின் பட்டகப் பிரதிபலிப்பு தன்னுடைய தன்மையை வெளிப்படுத்துகிறது. ஒளிரும் வானவில் அதன் பெயரான அழகை வெளிப்படுத்துகிறது. எலியாசன் அழகின் நுணுக்கங்களை முழுப்பாரவையில் வெளிப்படுத்துகிறார். அதாவது ஒரு விளக்குவட்டம், துளையிடப்பட்ட குழாய், நாம், அதாவது பார்வையாளர்கள் ஆகியவற்றின் தொகுப்பு. இவற்றுடன் வானவில்லின் மிக அடிப்படையான கூறுகளை இணைத்து இயற்கை நிகழ்வுகளின் உருவாக்கத்தில் அவருடைய தொடர்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறார். தண்ணீர் தொடர்ந்து ஓடினாலும் இந்த அமைப்பின் தோற்றம் இந்தக் கலைப்படைப்பின் தொடர்பில் நமது இடத்தால் பாதிக்கப்படுகிறது, ஒளி நீர்த்திவலைகள் மீது வெவ்வேறு வகையில் ஒளிவிலகல், ஒளி பிரதிபலிப்படையும் போது, எந்த இரு பார்வையாளரும் ஒரே வானவில்லைப் பார்ப்பதில்லை. அழகின் பொருண்மை ஒளி, பார்வையாளர் ஆகிய இருவரையும் சார்ந்தது. இது ஒரு வினாவை எழுப்புகிறது. வானவில் தனித்து உள்ளதா? அல்லது நாம் பார்ப்பதனால் இருக்கிறதா? *அழகு* ஏற்படுத்துகின்றது என்ற மீள்உணர்வும் வெளிப்படுத்தப்பட்ட பணியின் அமைப்பும் காட்சியின் நமது புரிதலையும் நமது

## *கோடுகளின் வழி வாழ்வதே வாழ்வு* **[தோற்றம்]**

2009
எவர் சில்வர், பித்தளை, செம்பு, கருவிகள், காட்சித் திரை, மரம், எச்.எம். ஐ விளக்கு
அளவு மாறுபடக்கூடியன.

*கோடுகளின் வழி வாழ்வதே வாழ்வு* என்ற நிறுவலின் இடத்தில் நடக்கும்போது நாம் கிடைமட்டக் கோட்டின் மீதமைந்த நிழல் விழுகின்ற ஒரு காட்சித்திரையின் பின்பகுதியைப் பார்க்கிறோம்.
இந்த நிழல்கள் பின்புறம் உள்ளவற்றைப் பற்றிய குறிப்பை அளிக்கின்றன, தன்னுடைய தயாரிப்பு முறைகளை மறைவின்றி வெளிப்படுத்தும். எலியாசன் நம்மை இந்தக் காட்சித்திரையைச் சுற்றி நடக்க அனுமதித்து முப்பரிமாண வடிவங்களை தட்டையாக்கி இருபரிமாணத்திலான தட்டையான கோட்டுருவாக்கும் கருவியை நாம் கண்டு கொள்ளச் செய்கிறார். இங்கு ஐந்து பொருட்களின் மாதிரிகள், திரைகளின் தொகுப்பு, ஒரு விளக்கு வட்டம் ஆகியவை உள்ளன. இந்தப் பொருள் மாதிரிகள் மெதுவாக அவற்றினுடைய அச்சில் சுழலுகின்றன. அவற்றின் நிழல்களும் அவற்றைப் பின்தொடர்கின்றன, பகிரப்பட்ட இந்த இயக்கம் நிழலுக்கும் பொருளுக்கும் இடையே ஒரு ஒத்திசைவை உருவாக்கி, இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன.

## *நட்சத்திரச்சூழல் ஒத்ததிர்வி* **[தோற்றம்]**

2018
பட்டக ஆடிவட்டம், வண்ண-விளைவு வடிகட்டிக் கண்ணாடி (மஞ்சள்),எல் இடி விளக்குகள், எவர்சில்வர், பித்தளை, வெள்ளை வண்ணம் , இழை
98.5 × 98.5 × 75 செமீ

*நட்சத்திரச்சூழல் ஒத்ததிர்வி*யில் ஒளி இருகுவிய பட்டகப் பரப்பின் ஊடே சென்று ஒரு மையப் புள்ளியிலிருந்து வெளிவரும் பல வளையங்களாகச் சிதறுகிறது. இது பிரஸ்னெல் ஒளி வில்லையின் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறது. பிரஸ்னெல் ஒளி வில்லை ஓர் ஒளி மூலத்தின் விளிம்புப் பகுதியிலிருந்து ஒளிக்கற்றைகளைப் பிடித்து அதிகவெளிச்சமுள்ள ஒளிக்கற்றையை உருவாக்குகிறது. பிரஸ்னெல் ஒளி வில்லை திறந்த கடலில் செல்லும் கப்பல்கள் பாதுகாப்பாக துறைமுகங்களைச் சென்றடைவதற்கான வழிகாட்டும் ஒளியை அளிக்க கலங்கரை விளக்கங்களில் பயன்படுத்தப்படுகிறது. *நட்சத்திரச்சூழல் ஒத்ததிர்*வியின் ஒளிபட்டைகள், இக்கண்டுபிடிப்பின் அறிவியல் பண்புகளை நடைமுறைப் பயன்பாட்டைத் தாண்டி அழகியல் அனுபவத்திற்கு ஒத்திசைவில் வேறுவிதமாக வழிகாட்டும் ஒளியாகும்.

## *செயலால் வரையறுக்கப்படும் பொருள் (அப்போது)* **[பார்வை]**

2009
நீர், எவர்சில்வர், நெகிழி நுரை, நெகிழி, பம்ப், குழாய் முனை விளக்கு
அளவுகள் மாறக்கூடியன

*செயலால் வரையறுக்கப்படும் பொருள் (அப்போது)* மிகவும் கருமையான இருட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள ஒரு நீர் அமைப்பைக் கொண்டதுஅதன் பொங்கி வருகின்ற நீர் வெடிப்பு செறிவுமிக்க தீவிரமான போக்கில் நிற்காமல் மின்னும் ஓர் ஒளிக்கற்றையால் ஒளியூட்டப்படுகிறது. ஒவ்வொரு முறையும் ஒரு மணித்துளியின் மிகச்சிறிய நேரத்தில் ஒளியூட்டப்படும் போது நீரின் மயக்கும், உயிர்ம நிலையில், மாறிக்கொண்டேயிருக்கும் வடிவத்தின் விட்டோடும் உருவத்தை நம்மால் அரிதாகவே காணமுடிகிறது. நிலையான, இடையீடு இல்லாமல் ஓடும் நீரின் ஓசை நம்மை தற்போதைய காலத்தில் நிலைநிறுத்தும் நேரத்தில், இப்படைப்பின் வேகம், உயரளவு ஒளியமைப்பு, இடைவிடாத மின்னற் சுழற்சியின் வேகம் மிக அற்புதமான உருவத் துண்டுகளின் முற்றுகை, இந்த நிகழ்ச்சி செயல்முறையைக் காலத்தின் பல நுண்வெடிப்புகளில் உறையச் செய்கிறது. ஒரே நேரத்தில் ஓர் இயக்கமுள்ள பொருள்சார்ந்த அமைப்பாகவும், நிலையான, அடிக்கடி மாறக்கூடிய கட்டமைப்பாகவும் உள்ள *செயலால் வரையறுக்கப்படும் பொருள் (அப்போது)* ஒரே நேரத்தில் இயக்கமுள்ள, நிலையான அமைப்பாகப்பார்க்கப்படுகிறது.

## *இயங்கும் நுண்நோக்கி* **[பார்வை]**

2011
காணொளி 16:9 (1920 × 1080 பிக்ஸ்), வண்ணம், ஒலி (ஸ்டீரியோ),
16 நிமிடம் 26 நொடிகள்

*இயங்கும் நுண்நோக்கி* கலைஞனின் கலைக்கூடத்தில் உள்ள ஒரு திரைப்பட அரங்கு ஆகும். கலைக்கூடத்தின் குழு அன்றாடச் செயல்பாடுகளின் ஈடுபடுவதைக் காணமுடிகிறது; அதாவது, காபி தயாரித்தல், கலைப்படைப்புக்களை நுண்ணாய்வு செய்தல், கூட்டங்கள் நடத்துதல். இவை அன்றாட நிகழ்வுகள் போலத் தோன்றினாலும், இவை கலையுடன் பிரிக்கமுடியாத அளவிற்கு மிகவும் பின்னிப்பிணைந்தவை. இப்பிணைப்பு ஒரு நடனக்குழுவின் மெருகேற்றலால் வெளிக்கொணரப்படுகிறது. இந் நடனக்குழு விளக்கமளிக்கும் வகையில் அவர்களைச் சுற்றி நடக்கும் செயல்பாட்டுடன் ஒத்திசையும் வகையில் நகர்கின்றது. முதலில் இந்த நடனமாடுபவர்கள் இந்தக் கலைக்கூடத்தின் சூழலுக்குப் பொருந்தாதவாறு தோன்றினாலும், அவர்களது நாடகத்தனமான இயக்கங்கள் சூழலுடன் கலந்துவிடுகிறது. இந்தப் படம் செல்லச்செல்ல அவர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகிறது. எலியசனின் கலைக்கூடத்தில் பொருள் சார்ந்த கலைப் படைப்புகள் திட்டமிட்டு உருவாக்கப்படும் போது, இந்த நிகழ்த்துக் கலைஞர்கள் படைப்புச் சக்தியின் வேறு வடிவத்தை அவர்களது உடல் உறுப்புகளால் ”படங்களாக வரைந்து” அளிக்கின்றனர்.

## *மஞ்சள் தாழ்வாரம்* **[பார்வை]**

1997
ஒற்றை அதிர்வெண் விளக்குகள்
அளவுகள் மாறக்கூடியன
ஜுவன் பேட்ரிசியா வெர்கஸ் சேகரிப்பு, பியுனஸ் அயர்ஸ்

மஞ்சள் தாழ்வாரத்தில் ஒளி ஓர் இழுவிசைப் பொருளாக இடம்குறிப்பானாக அமைகிறது. இதில் ஒரு வரிசையில் உள்ள ஒற்றை அதிர்வெண் விளக்குகள், இரண்டு அரங்குகளுக்கிடையே உள்ள வழியை ஒளியூட்டுகின்றன. அதிகமான பிரகாசமுள்ள இடத்தில் ஒளி அது தொடும் அனைத்தையும் குறைவானதாக ஆக்கி, நமது காட்சி நிறமாலையின் வண்ணங்களைக் குறைத்து நிழலாக ஆக்குகிறது. இது பெரும்பாலான பார்வையாளர்கள் பார்க்காததாகும், இங்கு, பொதுவாக அரங்கு இடைவெளிகளுக்கிடையே பயன்பாடுள்ள இணைப்பாகச் செயல்படும்

வழியில் எலியாசன்  உடல் சார்ந்த அனுபவத்திற்கு ஏற்பாடுசெய்துள்ளார். எலியாசன் இதுபோன்ற ஒற்றை அதிர்வெண் விளக்குகளைப் பிற சூழல்களில் பயன்படுத்தி இருந்தாலும், மஞ்சள் தாழ்வாரம் அவருக்கு உள்ள உடனடி வண்ண வரிசைப்படுத்தலுக்கான ஆர்வத்திற்கான குறிப்பிடத்தக்க முற்கால உதாரணமாகும். இந்த நடைபாதையின் இறுதியில் கடினமான மஞ்சள் விளக்குகள் அருங்காட்சியகத்தின் ஜன்னல் வழியாக வெளிவரும் பகல் நேர வெளிச்சத்தால் இடையீட்டிற்கு உள்ளாகின்றன. இது நம்மை மாற்றப்பட்ட உணர்வு நிலையிலிருந்து மெதுவாகத் திரும்பிச் செல்ல உதவுகின்றது.

## *கனசதுரக் கட்டுமானப் படி நிலை வளர்ச்சித் திட்டம்* **[பார்வை]**

2004
வெள்ளை லெகொ செங்கற்கள் (வெவ்வேறு அளவுகளில்), மரம், ஆடி
அளவுகள் மாறக்கூடியன
குயின்ஸ்லாந்து கலை அரங்கு, நவீனக் கலை அரங்கின் சேகரிப்பு

*கனசதுரக் கட்டுமானப் படி நிலை வளர்ச்சித் திட்டம்* கனசதுரக் கட்டிடங்கள் கொண்ட நகர அமைப்பை (லெகொ நகர அமைப்பை)ச் செம்மைப்படுத்துவதில் செயல்பாடு மிக்க பங்களிப்பை ஊக்குவிக்கிறது.  ஒரு  நீண்ட மேசையின் மேல் கற்பனையான கட்டடத் தொகுதி, வானுயர்ந்த அடுக்குமாடிக் கட்டடங்களுக்கிடையே வெள்ளைநிற பொம்மைச் (லெகோ) செங்கற்களின் குவியல்கள்  சிதறிக்கிடக்கின்றன. இந்தக் கட்டங்களை மேசையைச் சுற்றிலும் அமர்ந்துள்ளவர்கள் ஒரே நேரத்தில் கட்டலாம், பிரிக்கலாம். நமது தலைசிறந்த கட்டடக்கலைப் படைப்பை உருவாக்க அழைப்பதன் வாயிலாக, எலியாசன் திறந்த விளையாட்டிற்கு அழைக்கிறார், படைப்புத்திறனுக்கு வரவேற்கத் தக்க இடத்தை அளிக்கிறார். இந்த *கனசதுரக் கட்டுமானப் படி நிலை வளர்ச்சித் திட்டம்* ஓர் இறுதி வடிவமில்லாத கலைப்படைப்பாகும்,  இது உணர்வுப்பூர்வமான ஈடுபடுத்தலின் வழியாக முற்றுப்பெறுகிறது

## *குறியீட்டுப் பார்த்தல்* **[பார்வை]**

2020
லேசர் ( மஞ்சள்), பனிக் கருவி, காற்றுச் சாளர அமைப்பு, ஒலி
அளவுகள் மாறக்கூடியன

*குறியீட்டுப் பார்த்தலில்* ஓர் அறையின் கூரை ஒரே நேரத்தில் பொருளின் மூன்று நிலைகளில் இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. முதல் பார்வையில் அது சமமாகவும் திடமாகவும் தோன்றும். ஆனால், நன்கு  நெருங்கி நோக்கினால், இக்கூரை சிறு சுழலும், வட்டவடிவில் நகரும் சிற்றலைகளை உருவாக்கும் ஒரு திரவத் தோல் போலத் தோன்றுகிறது. இந்த விளைவுகள் ஒருங்கிணையும் வண்ணமுள்ள லேசர் ஒளிக்கற்றைகள், அவ்வப்போது வெளியிடப்படும் பனிப்புகையின் விளைவாகும். இவ்வாறு தற்காலிகமான பொருள்களை உள்ளடக்கிய ஒன்றிய நிலையில் பார்த்தல் திட நிலைகளுக்கிடையே உள்ள எல்லையில் இருப்பதாகத் தோன்றுகிறது. இது தனியாகவும், சமூக அளவிலும் வெளிப்படக்கூடிய எதிர் நோக்கக்கூடிய இயக்கத்திற்கான உயிர்மச் சூழலாகின்றது